**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P204 இதழியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இந்தியாவின் முதல் அச்சு தமிழ் நூல் எது?
2. ஒரு நிருபர் வழக்கமாகச் சென்று செய்தியைத் திரட்டும் இடத்தைக் குறிப்பிடப்பயன்படும் கலைச்சொல் எது?
3. பன்னாட்டு உழைக்கும் இதழாளர் மாநாட்டை நடத்தும் நிறுவனம் எது?
4. அல்ஹிலால் எனும் இதழின் ஆசிரியர் யார்?
5. செய்தியாளர்கள்தான் செய்தித்தாளிற்கு குருதி போன்றவர்கள் என்று கூறியவர் யார்?
6. செய்தி மூலங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?
7. தினத்தந்தி செய்தித்தாளின் நிறுவனர் யார்?
8. எத்தகையச் செய்திகளை வெளியிடக் கூடாது?
9. தலைப்பைப் படித்த அளவிலேயே முழுச்செய்தியையும் படிக்கத்தூண்டும் தலைப்பிற்கு என்ன பெயர்?
10. இதழ்களில் அமையும் தலையங்கம் எவ்வாறு இருக்க வேண்டும்?
11. எழுத்து அளவை எந்த அளவுப்பெயர் கொண்டு அழைப்பார்கள்?
12. துணுக்கு என்ற சொல்லின் பொருள் யாது?
13. சொற்களுக்கு இடையில் இடைவெளி வேண்டும் என்பதற்குப் பயன்படுத்தப்படும் திருத்தக் குறியீடு என்ன?
14. அச்சுவார்க்கும் பொறிகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
15. லித்தோகிராபி என்றால் என்ன? பல்வேறு வண்ணங்களில் அச்சிடுவதற்குப் பயன்படும் முறை

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. இதழியல் சுதந்திரத்திற்கானத் தடைகளை விளக்குக?
2. பத்திரிக்கைக் குழுச்சட்டம் என்றால் என்ன?
3. இந்தியாவில் உள்ள செய்தி நிறுவனங்களைக் குறிப்பிடுக?
4. நேர்காணலில் செய்யக்கூடாதவைகளை எழுதுக?
5. மாதிரித் திட்டவரைவு சிறு குறிப்பு வரைக?
6. கேலிச்சித்திரம் வரையறை செய்க?
7. டெலிவியூ என்பது யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இதழ்களின் நோக்கம் குறித்து கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) செய்தியின் வகைகளை விவரிக்க.

2. (அ) நேர்காணலின் வகைகளை விளக்குக.

   (அல்லது)

   (ஆ) இதழ்களில் இடம்பெறும் துணுக்குகளின் வகைகளை கட்டுரைக்க.

3. (அ) இதழியல் மொழி நடை குறித்து விளக்கி வரைக.

   (அல்லது)

   (ஆ) செம்மையாக்கக் குறியீடுகளின் பயன்பாடுகளை விவரி?

❋ ❋ ❋